சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 65/2019**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியமாகிய **பண்டரிநாதன்** PW1 வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன்,எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **பண்டரிநாதன்** | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெயர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

04.03.2025

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத் ஏப்ரல் மாதம் 01ம் நாள் செவ்வாய்கிழமைதுத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 11.12.2018 தேதியிட்ட நிலபுல வரைபடங்கள் எண்ணிக்கை 17 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 31.12.2015 தேதியிட்ட நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி வழங்கப்பட்ட செட்டில்மெண்ட ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 07.07.1940 தேதியிட்ட கிரய சாசனம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3**ஆகும். 18.07.1984 தேதியிட்ட கிரய சாசனம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 4** ஆகும். 07.01.1986 தேதியிட்ட கிரய சாசனம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 06.11.2017 தேதியிட்ட 1ம் வாதி 1, 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 10.01.2018 தேதியிட்ட 1ம் வாதி 1, 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய கடிதம் அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆகும். 1ம் வாதி அனுப்பிய அறிவிப்பை 1, 3 பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல்

ஒப்புகை அட்டைகள் எண்ணிக்கை 2 அசல் **வா.சா.ஆ.8** ஆகும். தாவா சொத்துக்களுக்கான வழிகாட்டு மதிப்பு எண்ணிக்கை 12 இணையதள நகல் **வா.சா.ஆ.9** ஆகும். 17.03.2025 தேதியிட்ட கூகுள் மேப் வரைபடம் எண்ணிக்கை 2 இணையதள நகல் **வா.சா.ஆ.10** ஆகும். 12.03.2025 தேதியிட்ட வில்லங்க சான்று எண்ணிக்கை 2 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகும். வில்லங்க சான்று எண்ணிக்கை 2 இணையதள நகல் **வா.சா.ஆ.12** ஆகும். 01.11.1939 தேதியிட்ட கிரய சானசம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.13** ஆகும். 01.11.1939 தேதியிட்ட கிரய சானசம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.14** ஆகும். 20.06.1974 தேதியிட்ட தமிழ்நாடு அரசு வருவாய்துறை மூலம் வழங்கிய நில உடைமைக்குறிப்பேடு நகல் **வா.சா.ஆ.15** ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை ( 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்)**

வாதிகள் மற்றும் 1 முதல் 14 மற்றும் 18 முதல் 21 ஆகியோர் உறவினர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி 1ஐ தவிர மற்ற பிரதிவாதிகள் எனது பங்களிகள் என்றால் சரிதான். இதர பிரதிவாதிகள் எனது பங்காளிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்கனவே வம்பு சண்டை நடந்துள்ளதா என்றால் இல்லை. நான் தற்போது ஊரிலிருந்து மதுரைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். 2ம் வாதி தாவா இடத்தை விட்டு மெயின் ரோட்டிற்கு வீடுகட்டிவிட்டு வந்துவிட்டார் என்றால் அது தெரியாது. 3ம் வாதி தாவா சொத்தில் இல்லை என்றும், அவரும் இடம் பெயர்ந்து வெளியூர் சென்றுவிட்டார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறப்பதற்கு முன்பாக சொத்துக்களை விற்பனை செய்துவிட்டு திருச்சியில் சென்று செட்டில் ஆகிவிட்டார் என்றால் இல்லை. இரண்டு இடத்திலும் குடியிருக்கிறார். 5ம் பிரதிவாதி அய்யாத்துரை அவர் பெரிய மகனுடன் ஆயக்கரன்புலத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 9ம் பிரதிவாதி அரவிந்த் சென்னையில் செட்டில் ஆகிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 11ம் பிரதிவாதி ஆர்த்தி குஜராத்தில் குடியிருந்து வந்தார் என்றால் குடியிருந்து வந்தார். தற்போது வெளிநாடு சென்றுவிட்டார். 12 ம் பிரதிவாதி உலகநாதன் மதுரையில் செட்டில் ஆகிவிட்டார் என்றால் இல்லை. மன்னார்குடியில் செட்டில் ஆகிவிட்டார். 14ம் பிரதிவாதி நக்கீரன் எங்கு வசிக்கிறார் என்றால், பல ஊரில் வசித்து வந்தார். தற்போது

உள்ளூரில் வசித்து வருகிறார். 18ம் பிரதிவாதி ராஜேஸ்வரி தாவா சொத்தில் உள்ளாரா என்றால் அவர் பன்னாலில் இருந்து வருகிறார். 19ம் பிரதிவாதி சேகர் குஜராத்தில் உள்ளார் ஊர் தெரியாது. 20ம் பிரதிவாதி அறச்செல்வி தாவா சொத்தில் இருந்து 1 கி.மீ. தள்ளியுள்ளார் என்றால் சரிதான். 21ம் பிரதிவாதி சுரேஷ்க்கு தாவா சொத்தில் வீடு இல்லை. அவர் வேறு சாலை வழியாக சென்றுவருகிறார் என்றால் தாவா சொத்தில் அவருக்கு உரிமையுள்ளது. தாவா சாலையானது எங்கள் உறவினர் மட்டும் பயன்படுத்த கூடிய சாலையா அல்லது ஊர் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய சாலையா என்றால் அந்த சாலையை எனது முயற்சியால் எனது தந்தை போட்டார். அதனால் எங்கள் உறவினர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது. நான் அமைத்த சாலை நீளம், அகலம் எவ்வளவு என்றால் நீளம் 200 மீ இருக்கும் அகலம் 4 மீ இருக்கும். அந்த சாலையின் கிழக்கு பக்கத்தில் முதலில் 3ம் வாதியின் இடம் உள்ளது. இரண்டாவது இடம் 1ம் பிரதிவாதியின் பெயரில் சாலையின் இரண்டு பக்கம் உள்ளது. மூன்றாவதாக எங்களது இடம் உள்ளது. இதர பிரதிவாதிகளுடைய வீடு மற்றும் சொத்துக்கள் இந்த பாதையை தாண்டி தான் உள்ளது என்றால் சரிதான். வாதிகளும் பிரதிவாதிகள் செல்வதற்கு மேற்படி பாதையை தவிர வேறு இதர வழிகள் இல்லை. மேற்படி பாதையில் தற்போது 6ம் பிரதிவாதி மகன் சுந்தரமூர்த்தி மற்றும் 10 பிரதிவாதி ஆனந்த் ஆகியோர்கள் வீடு கட்டியுள்ளார்கள். வழக்கு போடும் போது அவர்கள் வீடு கட்டவில்லை. தாவா பாதைக்கு மேற்க்கு பக்கத்தில் தார் சாலை உள்ளது என்றும் அதை தான் நாங்கள் அதிகம் பயன்படுத்தி வருகிறோம் என்றும், தாவா சாலையில் இரு சக்கர வாகனம் மட்டும் செல்ல பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரிதான். 1 பிரதிவாதி சாலையை எந்த தேதியில் மறைத்தார் எதை வைத்து மறைத்தார் என்று கூற முடியுமா என்றால் கஜா புயலுக்கு பிறகு கட்டையை வைத்து மறைத்தார். கஜா புயல் அடிக்கும் போது நான் ஊரில் இல்லை. நான் மதுரையில் இருந்தேன். பின்னர் நிவாரன பொருட்களை எடுத்து கொண்டு ஊருக்கு வந்த போது தாவா பாதையில் மரக்கட்டைகள் போட்டு அடைக்கப்பட்டிருந்தது. நான் எனது பேரனிடம் சொல்லி அதனை நீக்க சொன்னேன். அவர் நீக்கினார். அப்போது 1ம் பிரதிவாதி ஆட்சேப்பித்தாரா என்றால் இல்லை. பன்னாள் கிராமத்தில் கஜா புயல் காரணமாக உள்ளே வெகு நாட்கள் ஆகிவிட்டது என்றால் இல்லை. 1 வாரத்தில் சரி செய்துவிட்டார்கள். 1ம் பிரதிவாதி சாலையில் கட்டையை போட்டு மறைத்த காரணத்தினால் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் . 1ம் பிதிவாதி காவல் நிலையத்தில் இனிமேல் கட்டையை போட்டு மறைக்க மாட்டேன் என்று எழுதி கொடுத்துவிட்டு வந்துவிட்டார்.

நான் யார்மேல் புகார் கொடுத்தேன் என்றால் கந்தசாமியின் மீது மட்டும் புகார் கொடுத்தேன். தாவா சாலைக்கு அருகில் வாதிகளாகிய எங்களிடம் உள்ள நிலையில் இதர பிரதிவாதிகளிடம் சாலைக்கு அப்பால் உள்ள நிலையில் 1ம் பிரதிவாதி சாலையை மறைத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கு விருப்பம் இல்லாமல் அவரை நான் கட்டாயப்படுத்தி இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சாலை தற்போது செயல்பாட்டில் உள்ளதா என்பது குறித்து பார்வையிடுவதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தேனா என்றால் இல்லை. தாவா சாலையின் அகலம் தோராயமாக 4 மீ அகலம் இருக்கும் என்றால் சரிதான். 3ம் வாதி ராஜேந்திரன் இடம் அருகில் சாலையில் 2 மீ அளவிற்கு ராஜேந்திரன் சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் இல்லை. வழக்கு சாலையானது தற்போது மண் சாலையாக உள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியிடம் 1ம் பிரிவாதி 1986ல் 15 செண்ட் நிலத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் கிரயம் சரிதான். ஆனால் அவ்வளவு நிலம் அங்கு இல்லை. புல எண். 87/3ல் கிரயம் வாங்கும் போது 19 செண்ட் இருந்து என்றும், அதில் 15 செண்ட் நிலத்தை கிரயம் வாங்கப்பட்டது என்றால் அது தவறாகும். மேற்படி கிரயம் எதனால் தவறு என்று கூறுகிறேன் என்றால் மேற்படி புல எண். 4 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுவிட்டதால் அவ்வளவு சொத்து மேற்படி புல எண்ணில் இல்லை. 14ம் பிரதிவாதி நக்கீரனும் அவரது அப்பாவும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு 1984ம் ஆண்டில் புல எண். 87/6ல் 6 செண்ட் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். புல எண். 87/6ல் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி 6 செண்ட் சொத்தை 1940ல் நாங்கள் கிரயம் வாங்கிவிட்டதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். புல எண். 87/6 சொத்து ஏற்கனவே எங்கள் மூதாதயர் கிரயம் பெற்றுள்ளதாக கூறியுள்ள நிலையில் அந்த கிரயத்தின் நான்கு எல்லை கூற முடியுமா என்றால் அதற்கான ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். புல எண். 87/6 சொத்தினை கிரயம் வாங்கும் போது புல எண் 87/5க்கான நான்கு எல்லை போட்டு கிரயம் வாங்காமல் புல எண். 87/6 என்று தவறுதலாக குறிப்பிட்டு கிரயம் வாங்கப்பட்ட நிலையில் அதற்கான பிழை திருத்த பத்திரத்தை 1940 முதல் தாக்கல் செய்யவில்லை என்றும், அதற்கான முயற்சியை நாங்கள் எதுவும் எடுக்காமல் புல எண். 87/6ல் கொடுக்கப்பட்ட கிரயம் தவறு என்று பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது அய்யாத்துரை பெயரில் 87/6க்கு பட்டா உள்ளது. தாவா பாதையானது எங்களுக்கு சொந்தமான

சொத்தாகும். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்பது அது அவர்களது தனிபட்ட சொத்து என்றால் அது பொது சொத்தாகும். 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து அவரது அனுபவத்தில் தான் உள்ளது என்றும் அதில் நான் எந்த ஆட்சேபனையும் செய்யமுடியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 2 கிரய சொத்துக்களும் அவர்களது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த பத்திரங்களை ரத்து செய்ய கோருவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகள் சாலையை மறைத்துவிட்டார்கள் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. மேற்படி சாலை எல்லோரும் செல்லும் வகையில் பொதுவாக அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( 18, 19 பிரதிவாதி தரப்பில்)**

சாலை தற்போது பயன்பாட்டில் உள்ளது என்றால் 1961ம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ளது. 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்திற்கும் தாவா பாதைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எங்கள் பங்காளிக்கு மாப்பிள்ளை என்றால் சரிதான். அவர் எங்கள் பங்காளி சொத்தில் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை (20, 21 பிரதிவாதி தரப்பில்)**

மேற்படி 18, 19 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை 20, 21 பிரதிவாதிகள் தங்களுடைய குறுக்கு விசாரணையாக ஏற்கிறார்கள்.